திருக்குறள் ( Set 5)

1. ...................... ராயினும் நாகாக்க ................................
சோகாப்பர் .......................... பட்டு.

A. காவாக்கால், யாகாவா , சொல்லிழுக்குப்
B. யாகாவா,காவாக்கால் , சொல்லிழுக்குப்
C. சொல்லிழுக்குப் ,காவாக்கால், யாகாவா,
D. நாகாக்கா, காவாக்கால்,சோகாப்பர்

2. திருக்குறளில் விடுபட்ட சொல் யாது?

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் _______________
துப்பாய தூஉம் மழை. (12)

A. துப்பார்க்குத்
B. துப்பாரின்
C. துப்பாய
D. துப்பாரோடு

3. கீழ்க்காணும் பொருளுக்கேற்ற சரியான திருக்குறளைத் தெரிவு செய்க.

உண்பவர்க்குத் தக்க உணவுப் பொருள்களை விளைத்துத் தருவதோடு, பருகுவார்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பது மழையாகும்.

A வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு.

B அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

C துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

4. ________________________________________

**எழுமையும் ஏமாப் புடைத்து.**

மேலேயுள்ள **குறளின்** முதல் அடியைத் தெரிவு செய்க.

A ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
B யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
C எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
D உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்

LIVEWORKSHEETS

5. திருக்குறளின் விடுபட்ட பகுதியை நிறைவு செய்க.

| |
|---|
| ______________________________ |
| வைத்தூறு போலக் கெடும். (435) |

A. அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
B மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
C வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
D அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

6.கொடுக்கப்பட்ட கூற்றுக்குப் பொருத்தமான குறளைத் தெரிவு செய்க.

| |
|---|
| மனிதர்களாகிய நாம் எவ்வளவு வாசிக்கிறோமோ அந்த அளவிற்கு அறிவு பெருகும். நம் அறிவைப் பெருக்கிக் கொள்ள ஓய்வு கிடைக்கும் போதெலாம் வாசிக்க வேண்டும். |

A. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்துத் தூறும் அறிவு.
B. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.
C. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை

7.

| |
|---|
| தமக்குப் புகழ் உண்டாகுமாறு வாழ முடியாதவர் தம்மைத் தாமே நொந்து கொள்ளாமல், தம்மை இகழ்கின்றவரை நொந்து கொள்வதால் பயனில்லை. |

A மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.
B வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.
C தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.
D புகழ்பட் வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவது எவன்.

LIVEWORKSHEETS

8. கொடுக்கப்பட்ட குறள் அடி உணர்த்தும் பொருள் என்ன ?

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
<u>யாண்டும் இடும்பை இல</u>

A. அவனை வறுமையில் தள்ளி விடும்.

B. எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

C. ஆராய்ந்து கொள்ளலாம் என்பது குற்றம்.

D. நோக்கியவுடன் விருந்தினர் வாடி நிற்பர்.

9. திருக்குறளின் முதல் அடியைத் தேர்ந்தெடு.

________________________
இகழ்வாரை நோவது எவன்.

A. எழுத்தறி வித்தவன் இறைவனாகும்
B. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
C. புகழ்பாட வாழாதார் தந்நோவார் தம்மை
D. புகழ்பாட தந்நோவார் வாழாதார் தம்மை

10.

| | |
|---|---|
| கணவர் | : சுமதி, என் அத்தை இன்று நம் வீட்டிற்கு வருகிறார். தயவு செய்து பழையக் கோபத்தை அவரிடம் காட்டி விடாதே. |
| சுமதி | : ஆம்.சரி. என்னத்தான் அவர் மீது எனக்குக் கோபம் இருந்தாலும், வீடு தேடி வரும் அவரை நான் வேறுபட்டு நோக்காமல் இன்முகத்துடன் வரவேற்று கவனிப்பேன். |

மேற்காணும் சூழலில், சுமதி தன் கணவரிடம் கூற நினைக்கும் குறளின் முதலடி என்ன?

A அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
B வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும்
C எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
D மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து

LIVEWORKSHEETS